பதிவு எண்—M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

தமிழ்க் கிழமை வெளியீடு :- இது, சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—௫ | குருகுலம், மாம்பாக்கம் ; விகிருதி, மாசி ; 2—3—51. | தளிர்—௨௰

"குணநலம் சான்றோர் நலனே ; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

"கடனென்ப நல்லவை யெல்லாம் ; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

முதியோர் கல்வி

"முதியோர் கல்வி என்னும் பெயரிலேயே அதன் கருத்து தெளிவாக விளங்குகின்றது. பதினைந்து ஆண்டுகட்கு மேலும் கல்வி கல்லாதவர்கள், முதியோர் கல்வித் திட்டத்தில் கல்விப் பயிற்சி பெறலாம்.

அரசியலார் இது குறித்து அறிக்கை விடுத்திருக்கின்றனர்; ஒவ்வொரு கிராமத்திலும் முயற்சி செய்யுமாறு கட்டளை இட்டிருக்கின்றனர். கிராமங்களில் செயற்குழு ஏற்படுத்தி, முதியோர் கல்வியைப் பரப்பப் பாடசாலை ஆசிரியர்கள் ஒத்துழைக்கவேண்டும்.

இக் குருகுலத்தின் சிறுவர் சிறுமியர், முதியோர் கல்விக்குரிய கருத்துக்களை இன்று தங்கள் நடிப்பின் வாயிலாக மிக அழகாய் விளக்கிக் காட்டினர்.

இவ் வட்டத்திற்கு ஒரு நிலையான முதியோர் பள்ளி, கட்டாயம் வேண்டும். குருகுலத்தில் இன்று அது தொடங்கப்பெற்றது நன்று.

குருகுலத்தில் திரு. இளவழகனார் பொது நலத்துக்காகச் சிறந்த உழைப்பெடுக்கின்றார். இக் குருகுலத்தில், கூடிய விரைவில், அடிப்படைக் கல்விப் பயிற்சிக் கல்லூரியோ, முதியோர் கல்விப் பயிற்சிக் கழகமோ, இரண்டுமோ நிலையாக நடைபெற வேண்டும் என்பது என் விருப்பம்.

கட்டடம் மிக அழகாக அமைந்திருக்கிறது. இன்று தொடங்கிய முதியோர் பள்ளியுடன், மிக அண்மையிலேயே இங்கு 'முதியோர் கல்விப் பயிற்சிக் கழக'மும் தொடங்கினால் நல்லது".

—திரு. அகிலா அம்மையார் B.A., L.T.
அவர்கள் நல்லுரை. 22—2—51.

— கல்வி நெருக்கடி —

பெற்றோர் தம் கடமைகளைக் கவனிக்கவேண்டும்

குருகுலத்தில் நிகழ்ச்சி

கல்விக் கண்காணிப்பாளர் ஆர்வ உரை

முயற்சிகள் பற்றித் தெளிவான விளக்கம்.

கல்வியைக் குறித்து நெருக்கடி மிகுந்து கொண்டு வருகிறது. நாட்டில் முதலில் பள்ளி வேண்டும் என்கிறார்கள். பெருமுயற்சி செய்து பள்ளிகள் அமைத்தபின்னர், தக்க ஆசிரியர்களும் அமைக்கப்படுகின்றனர். அவ்வளவுடன் தம் பொறுப்பு நீங்கிவிட்டதாகப் பெற்றோர் விலகிவிடுகிறார்கள்.

பள்ளியில் சிறுவர்களின் படிப்பு முதலிய தேர்ச்சிகளைத் தொடர்பாகக் கவனிப்பதில்லை. நேற்றைய நிலைமைக்கு இன்று எதாவது பள்ளியில் முன்னேற்றம் உண்டா? என்று பெற்றோர் கவனிப்பதில்லை.

ஒவ்வொரு குழந்தையும் ஐந்தாவது வரையிலாவது படித்து எழுதப்படிக்கத் திறமை கொள்ளுதல் வேண்டும் என்பதில் பெற்றோரே அக்கறை கொள்ளவேண்டும். மாணவரிற் சிலர் ஓரிரண்டு ஆண்டுகள் படிப்பதோடு நின்றுவிடுகிறார்கள்.

பள்ளிகள் நடைபெறுவதற்கு அரசியலார் மானியம் (Grant) கொடுக்கிறார்கள், 5 வகுப்புவரையில் படித்தால் மட்டுந்தான், கொடுக்கும் மானியம் வீண் (Wastage) ஆகாது; மக்களுக்கும் பயன்படும். அரசியலார், ஒவ்வொரு சிறுவர் சிறுமியரும் நாளுக்கு ஒரு வேளையாவது கட்டாயம் படித்தாக வேண்டும் என்று கூறுகிறார்கள்; இரண்டு வேளையும் படிப்பதுதான் நல்லது. முடியாதவர்கள், இவ் வகையாசவாவது (Part time pupils) ஒருவேளைக் கல்விப் பயிற்சியில் ஈடுபடுவது நல்லது.

குடியரசு ஆட்சி தொடங்கி இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. நாட்டில் அரசியல் உரிமையோடு கல்வியின் தேர்ச்சியும் சமமாக முன்னேற வேண்டும். தாயார் உண்வுப் பொருள்களைத் தன் குழந்தைக்குச் சமமாகப் பகிர்ந்தளித்தல்போல ஆசிரியர் மனச்சான்றுக்கு மாறின்றி எல்லா மாணவரையும் சமமாகக் கருதுகிறாரா என்று பெற்றோரே கவனிக்க வேண்டும்.

நல்லொழுக்கம் உடல் தூய்மை இவைகளில் சிறுவர்களைக் குறித்துப் பெற்றோரே தக்க கவனிப்பு மேற்கொள்ளவேண்டும்.

"When wealth is lost
nothing is lost
When health is lost
something is lost
When character is lost
everything is lost"

என்று சொல்கிறார்கள்.

சிறுவர் ஒழுக்கத்துக்குப் பெற்றோரே பொறுப்பாளர். குழந்தைகள் ஆசிரியரிடம் ஒரு நாளில் 4, 5, மணி நேரமே உள்ளனர். மற்ற நேரங்களில் தம் பெற்றோரிடம் உள்ளனர். பெரும்பாலும் தம்முடன் இருக்கும் குழந்தைகளின் ஒழுக்கத்தைப் பற்றிப் பெற்றோர் தக்க அக்கறை எடுத்துக் கொள்ளுதல் நல்லது.

பெண்ணாறு கிருஷ்ணா ஆறுகளில் வீணாகக் கழிந்துபோகும் தண்ணீரைப் பயன்படுத்தக் கால்வாய் வெட்டுகிறார்கள். வீணாகும் தண்ணீரைத் திருப்பிக் கால்வாய் வழியாக நாட்டு வளம் பெருக்க வழி கோலுகிறார்கள். அதைப்போலக் குழந்தைகள் வீணாகக் காலங்கழிந்து [illegible]ர்ந்து போகாமல், கல்வியில் ஊக்கம் செலுத்தி அறிவு மிகும்படியான நல்ல வழியைப் பெற்றோர் கருதவேண்டும்.

பாடசாலை நன்றாக நடைபெறுகிறதா என்று ஆண்டொன்றுக்கு நாலைந்து முறை நான் கணிக்கை நடத்துகிறேன்; அது போதாது; பெற்றோர்தாம் பள்ளியை முதன்மையாகக் கவனிக்க வேண்டியவர்கள்.

நம் நாட்டில் முதியோர் பலர்க்குக் கையெழுத்து மட்டுந்தான் போடத் தெரியும். இதனால், எவ்வளவோ தீமைகள் நாட்டில் நிகழ்கின்றன. இவ்வறியாமையைப் போக்க முதியோர் கல்வித் திட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு, நாற்பது நாட்களுக்குள் முதியோர் பலரும் எழுதப் படிக்கத் தெரிந்து கொள்வார்கள் என்று நினைக்கின்றேன்.

அமெரிக்காவில் அறிவியல் (விஞ்ஞான) முறையில் மழைபெய்ய வைக்கிறார்கள். லண்டனில் நேரு.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

உயர்ந்த --
வைரங்கள்
சவரன் பொன் நகைகள்
அசல் வெள்ளி
சாமான்கள்
உத்தரவாதமுள்ளவை
S சாமிநாத அய்யர் & சன்ஸ்
111, நேதாஜி போஸ் ரோடு,
சென்னை 1.
வெள்ளி விக்கிரகங்களும் கிடைக்கும்
— GUARANTEED —
JEWELLERY HOUSE

பெரிய புராணம்

திருக்கயிலை மலையின் வெண்மை நிறம் பெருந் தூய்மையை உணர்த்தும்; அது, உள்ளத் தூய்மை! உலகத்துக்குப் பொருள் தூய்மை, புலன் தூய்மை, புந்தித் தூய்மை வேண்டும். பொருள் தூய்மைத் தலைவர், செல்வத் திரு மிக்க திருமால்; புலன் தூய்மைத் தலைவர், கல்வித் திரு மிக்க நான்முகன்; புந்தித் தூய்மைத் தலைவர் அதாவது உள்ளத் தூய்மைத் தலைவர், அருள் திரு மிக்க திருநீல கண்டர்.

பொருள் தூய்மை கல்வித் தூய்மையின் பெருக்கத்துக்கு உதவும்; இரண்டும் உள்ளத் தூய்மையின் மிகுதிக்கு உதவும். உள்ளத் தூய்மையின் குறிக்கோளுடன் பொருளும் கல்வியும் கையாளப்பட வேண்டும். பொருள் தலைவரும் கல்வித் தலைவரும் அருள் நலத் தலைவரின் சேவைக்கு உரியவர்கள். ஆகவே, திருமாலும் நான்முகனும் திருக்கயிலையில் உமை கேள்வன் சேவையில் ஈடுபட்டிருப்பது மரபு.

நான்முகனுக்கு ஊர்தி அன்னப் பறவை; அது, தன் வெண்மை நிறத்தால் தூய்மையாய் அழகாய்க் காட்சியளித்தும் ஆனால், அது கல்வித் தூய்மைக்கே அறிகுறி; ஆகவே, உள்ளத் தூய்மையின் அறிகுறியாயுள்ள திருக்கயிலை மலையின் வெண்மை நிறம் அன்னப் பறவையின் நிறத்தினும் மிக்கதாகும்: திருக்கயிலைத் தாழ்வரையில் நான்முகன் தன் அன்ன ஊர்தியை விட்டுவிட்டு ஆண்டவன் சேவைக்குச் செல்வது வழக்கம்; சில நேரம் சேவைக்குத் தகுதியான காலமாய் இராது; அந் நேரங்களில் உடனே திரும்பிவந்து தன் ஊர்தியைத் தேடுவான். திருக்கயிலை மலையின் மிகுதியான வெண்மை நிறத்தில் அன்னத்தின் வெண்மை நிறம் மறைந்து, அது, எங்கே இருக்கின்றது என்று தெரிந்துகொள்ள முடியாதபடி இருக்கும். நான்முகன், காணாது திகைத்திருப்பான். காரணம், கலைத் தூய்மையினும் மேம்பட்டதாய் அருள் அதனை வென்றிருக்கின்றது. இத் தகைய சிறப்பு வாய்ந்தது, தூய்மையில் இணையற்றுத் திகழும் திருக்கயிலை மலை!

திருமால் தேவனும் சில நேரங்களில் இறைவன் சேவைக்குக் காலம் பார்த்துக் காத்துக்கொண்டிருப்பதுண்டு. அவன் ஊர்தியாகிய கருடன் அதனால் கயிலைத் தாழ்வரையில் நெடு நேரங் காத்திருக்கும்படி நேரும். சில நேரங்களில், திருமால் ஏன் இன்னும் திரும்பவில்லை என்று தேடும். அப்படித் தேடுங் கருத்துடன் பக்கங்களில் பார்த்த ஒரு நேரத்தில், அங்கே மூத்த பிள்ளையாரின் ஊர்தியாகிய பெருச்சாளி தன் இயல்பின்படி ஒரு முழையில் இருந்தது. கருடனுக்கு ஒரு நினைவு பிறந்தது. முன்பு ஒருகால், இறைவன் செஞ்சுடர் வடிவாய் நிமிர்ந்தபோது, அதன் அடியைக் காணும் பொருட்டுத் திருமால் பன்றி வடிவாய் நிலத்தைக் குடைந்து கொண்டு சென்றான்; ஒருகால் அந்தச் சுடர் இன்று வெண்சுடராய் நிமிர்ந்துள்ளது போலும்! அதனால், அதன் அடி காணும் விருப்பால் இன்றும் அப் பன்றி வடிவுடன் திருமால் இம் முழை நுழைந்து செல்கின்றனன் போலும்! ஆகவே, அவனை நாம் அணுகுவோம் என்று கருடன் நெருங்குவதாயிற்று. கருடனது பார்வைக்குப் பெருச்சாளி பன்றி வடிவாய்த் தோன்றிற்று. கயிலையின் வெண்மை நிறம் இங்ஙனம் ஆண்டவனது தூய வெண்சுடர் என்றே கருதத்தக்கதாய்ச் சிறக்கும் இயல்புடையது!

வானவர்கோன் முதலான தேவரெல்லாம் தெய்வத் தேன் மலர் ஏந்தி வந்து அங்கே வழிபட்டு நிற்பர். அவர்கள் வரும்போது அவர்கள் முன் அரம்பையர் ஆடல் நிகழ்வது இயல்பு; ஆடலுக்கு ஏற்ப முழவுகள் முழங்கி வரும்; இயல்பாந் தன்மையே தன் வண்ணமாய் அமைந்துள்ள திருக்கயிலை மலையில் இயல்பாகவே வாத்திய முழக்கங்கள் நிகழ்வதுண்டு; அதாவது, கயிலைச் சரிவுகளில் வீழும் அருவிகளின் முழக்கங்கள் அங்ஙனம் முழவு போலவே எதிரொலிக்கும். அரம்பையராடலின் முழவொலிக்கும் எதிரொலியாய் இவ் வருவி முழக்கம் இனிதிசைப்பதாயிற்று. திருக்கயிலையின் இயற்கைச் சிறப்புகளும் இவ்வாறு பற்பலவாம்.

மற்றொரு பெருஞ் சிறப்பு, திருக்கயிலை மலைக்கு உண்டு; நந்தியெம் பெருமான் காவலுடையது அது, அவர், திருக்கயிலை மலையின் தலைமைக் காவலர்; உடைவாளும் பிரம்பும் அவரிடம் உண்டு. கோபுர வாயிலில் இருந்துகொண்டு ஒழுங்கு காத்திருப்பார். நான்முகன் திருமால், இந்திரன் முதலிய விண்ணுலகத்தோரும் முனிவர் முதலியோரும் இவர் ஆணைக்கு அடங்கியே திருக்கயிலையில் நடந்து கொள்ள வேண்டும். அத்தனை மாட்சிமை வாய்ந்தவர் இவர்; இவர் ஆட்சியின் மேன்மையால் திருக்கயிலைச் சிறப்பு மேன்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

கைத்தறி ஆடைகள்

வணிகக் குறி !

—N. K. M.—

தங்க நாடா

(பதிவு)

எண் 20 முதல் 100 வரையில்
வேட்டி, சேலை, துண்டு, போர்வை,
மேலாடை முதலியவை பல வகைகளிற் கிடைக்கும்.

நூலாடைகட்கும்
பட்டாடைகட்கும்

நம்பிக்கையான இடம் :

கருப்பண முதலியார்
ஸ்டோர்ஸ்,

துணி வாணிபம்,

53, கிடங்குத் தெரு, சென்னை 1.

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."
—புறநானூறு.

கிளை	விகிருதி, தை	தளிர்
3	2-3-51 வெள்ளி	20

மாதர் பணி

இல்லறத்திலிருந்து இயக்கும் பண்பு மாதருக்கும், அப் பண்பாற்றலால் இயங்கிச் செயற்கருஞ் செயல்களைச் செய்யுந் திறம் ஆடவருக்கும் இயல்பாகவே இருந்து வருகின்றது* இம் முறையினின்று மாறுதல் அவ்வளவு விரும்பத்தக்கதன்று.

மாதர் அடிசில் தொழிலில் ஈடுபடுவது அருவருப்பானது என்னும் எண்ணம் அவருலகத்தில் சிறிது சிறிதாகப் பரவிவருகின்றது. சிலர் அத் தொழில் தமக்குத் தெரியாது என்று கூறுவதையும் பெருமையாகக் கருதுகின்றனர். இது, நாட்டு முன்னேற்றத்துக்குப் பெருந் தடை என்று துணிந்து கூறலாம்.

ஆடவரிற் பலர் சேற்றில் உழுந்து உழவு தொழில் செய்தல் குறைவானதென்று கருதி, வெற்றுக் கல்வியிலும் அடிமை அலுவலிலும் நுழைந்து போலி நாகரிகங்களை விட்டில்போல் விழைந்து கிராமப் புறங்களைப் புறக்கணித்ததன் பயனை, இப்போது அரை வயிற்றுக்குக் குறைவான உணவும் பெருஞ் செலவு செய்தும் பெறாமல் அன்றாடம் பட்டினிகிடந்து நுகர்கிறார்கள்.

உணவு தேடுவோர் நிலை இங்ஙனம் இரங்கத்தக்கதாயிற்று; இனி, உணவு படைப்போர் நிலையும் இவ்வாறு நிலை குலைந்துபோக வேண்டுமா?

புறத் துறைகளை விரும்பி முற்றிலும் வெளியே சென்று வீட்டை வெறிச்சென்று ஆக்குதலைவிட, இல்லறப் பண்பினால் வீட்டில் விளக்குபோல் விளங்கி, வீட்டிலும் நாட்டிலும் வளங் காண விழைவது மாதர்க்குச் சிறந்த பணி! [சி. து. க.]

* The true wife takes a simpathy in her husband's pursuits. She cheers him; Encourages him, and helps him. She enjoys his success and pleasures and makes as little as possible over his vexations. —Samuel Smiles "Duty"

ஒரு விண்ணப்பம்

முருகவேளின் பன்னிரு திருமுறை

1. திருமுறைப் பாகுபாடு

சிவபிராற்கு உரிய பன்னிரு திருமுறைகளுக்கு ஒப்பனவாக, முருகவேளுக்கும் உரியன பன்னிரு திருமுறைகள்.

1 முதல் 7 திருமுறைகள் :

முதல் எழு திருமுறைகளாம் 'தேவாரம்' போல, திருப்புகழும் முதல் எழு திருமுறைகளாம். (ஆறு படை வீட்டுத் திருப்புகழ்ப் பாக்கள் ஆறு திருமுறைகள்: பிற திருப்பதிகளின் திருப்புகழும் பொதுத் திருப்புகழும் ஏழாந் திருமுறை.)

8-ந் திருமுறை :

'திருவாசகம்' 'திருக்கோவையார்' எட்டாந் திருமுறையாமாறு, திருவாசகத்துக்கு இணையாம் கந்தரலங்காரமும், அகப்பொருள் கொண்ட திருக்கோவையாருக்கு ஒப்ப அகப்பொருள் அமைந்த கந்தரந்தாதியும் எட்டாந் திருமுறையாகும்.

9-ந் திருமுறை :

ஒன்பதாந் திருமுறையாகுந் 'திருவிசைப்பா'வுக்கு ஒப்ப, திருவகுப்பு ஒன்பதாந் திருமுறையாம்.

10-ந் திருமுறை :

மந்திர நூலாய்ப் பத்தாந் திருமுறையாகுந் 'திருமந்திரத்'துக்கு இணையாக, மந்திர நூலாம் கந்தரநுபூதி பத்தாந் திருமுறையாகும்.

11-ந் திருமுறை :

அடியார் பலரின் பாடல் தொகுதியாம் பதினோராந் திருமுறைக்கு ஒப்ப, முருகவேளுக்குரிய பழைய அடியார்கள் பலர் பாடினவற்றுள் திரட்டப்பட்ட பகுதிகள் முருகப் பெருமானது பதினோராந் திருமுறையாய் விளங்கும்.

12-ந் திருமுறை :

திருத்தொண்டர் புராணமாம் பெரிய புராணத்துக்கு ஒப்ப, முருகவேள் தொண்டர்களின் புராணம் 'சேய்த் தொண்டர் புராணம்' என்னும் அருமைப் பெயருடன் வாகவி ஒருவரால் அண்மையிற் பாடப்பெற்றது பன்னிரண்டாந் திருமுறையாம்.

2. வெளியிட முயற்சி

இங்ஙனம் முருகவேளுக்குரிய பன்னிரு திருமுறைகளும் அளவுக்கு ஒத்த பகுதிகளாக அடிக்குறிப்புகள்

ஆராய்ச்சிக் குறிப்புகள் முதலிய பதிப்பு நலங்களுடன் வெளிவருமாயின், அது பெரிதும் விரும்பத்தக்கதாய் இருக்கும்.

செறிந்த உருக்கமும் நிறைந்த செல்வமும் உடைய ஒருவர் இச் சிறந்த பெரும் பணியை ஏற்றுக்கொண்டு முடிப்பின் மிக இனிதாகும். அங்ஙனங் கிட்டாமையால், அறுமுகவேளின் துணை கொண்டு, அன்பர் பலரின் கையொப்ப ஆதரவு பெற்று, பகுதி பகுதிகளாக வெளியிட்டு நூல்களை முடிக்கக் கருதியிருக்கின்றோம்.

முருகவேளின் அடியார்கள் இவைதமை உவந்து ஏற்றுப் பாராயண நூலாகக் கொண்டு, பன்னிருகைப் பெருமானது திருவருளைப் பெற்று இம்மை மறுமைப் பயன்களை அடைந்து பொலிய விழைகின்றோம்.

3. உரிய செய்கைகள்

இத் திருமுறைகள், திருப்புகழ்ப் பதிப்பாசிரியர் திரு. வ. த. சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் திருந்திய முறைப்படி, அவர்கள் 'சந்ததியார்' சார்பிலும் உரிமை லுமே அச்சிட்டு வெளியிடப்பெறும்.

திரு. வ. த. சுப்பிரமணிய பிள்ளையவர்களின் புதல்வர் ராவ்பகதூர் தணிகைமணி திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை M. A. அவர்கள் இத் திருமுறைகளின் பதிப்பாசிரியர். வெளியீட்டாளர் திரு. வ. ச. மயிலே பெருமாள் பிள்ளை B. A, B. L. அவர்கள்.

மதுராந்தகத்தை அடுத்து மாம்பாக்கத்தில் திகழும் குருகுலத்தின் அச்சகத்தில் இவை அச்சிடப்பெறும்.

ஏறக்குறைய ஒவ்வொரு பகுதியும் Foolscap 1/8 அளவில் மேல் உறையுடன் ஏறக்குறைய நூறு பக்கங்கள் கொண்டதாய் இருக்கும்; அப்படி, இத் திருமுறைகள் பன்னிரண்டும், ஏறத்தாழ 36-பகுதிகளாக வெளிவரக்கூடும் என்று தோற்றுகின்றது. நான்கு ஆண்டுகளில் இப் பணி நிறைவேறும் என்று நம்புகின்றோம்.

இக் கருத்து நிறைவேற, "கருத்தறிந்து முடிப்பா"னும் கந்தவேளின் கழலிணைகள் உறுதுணையாமாதலின், அத்துணையையே துணையாகக் கொண்டு இத் திருமுறைகள் வெளிவருதற்கு வேண்டி, அடியார்கள் பலருக்கும் இவ் விண்ணப்பம் செய்கின்றோம்.

4. இனிய திட்டங்கள்

முருகவேள் திருமுறைகளாகிய இவற்றைப் பெற விரும்பும் அடியார்கள், 'குருகுலம், மாம்பாக்கம், மதுராந்தகம் P. O.' என்னும் முகவரிக்கு ஒரு ரூபா முன்பணமாகச் செலுத்தித் தம் பெயரையும் முகவரியையும் பதிவு செய்துகொள்ளவேண்டும். ஐந்நூறு கையொப்பங்கள் சேர்ந்தவுடன் அச்சுவேலை தொடங்கப் பெறும். அடுத்து வரும் 'கர' ஆண்டுச் சித்திரைத் திங்களில் முதல் வெளியீடு கிடைக்கச் செய்யவேண்டும் என்பது எமது ஆவல்; அது, அன்பர்களின் உருக்கத்தையும் ஆதரவையும் பொறுத்திருக்கிறது.

தம் பெயரைப் பதிவு செய்துகொண்ட ஒவ்வொருவரும், ஒவ்வொரு பகுதியும் வெளிவந்தபின், பகுதி ஒன்றுக்கு ரூ. 1—4—0 விலை கொடுத்து அவரவர் பொறுப்பில் அவ்வப்போதும் பெற்றுக்கொள்ளவேண்டும். கடைசி பகுதி அவர்களுக்கு விலையின்றிக் கொடுக்கப்பெறும். (வெளியீடுகள், சென்னையில், குருகுல ஆசிரியர் இளவழகனார் அவர்களிடம் கிடைக்கும்; அஞ்சலில் பெற விரும்பினால், நூல் விலையுடன் அஞ்சலுக்குரிய செலவுத் தொகையும் மாம்பாக்கம் குருகுலத்துக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்போது பெயர்ப் பதிவு செய்துகொள்ளாத ஏனையோர்க்கு அவ்வப்போதுள்ள நிலைமைப்படி குறிக்கப்படும் விலைக்கு வெளியீடுகள் கிடைக்கும்.

5. அன்பின் வேண்டுகோள்

இத்தகைய ஏற்பாடு, நூலை அச்சிடுவோர்க்கு உதவியாகும்; நூலைப் பெறுவோர்க்கு எளிதாகும்; நூல் வெளிவருவதற்கு வழியாகும்.

இத் திருமுறைப் பகுதிகளில் ஏதேனும் ஒரு பகுதியோ அல்லது சில பகுதிகளோ தம் பெயரால் வெளிவர விரும்புவோர், ஏற்ற பொருளுதவி செய்யின், அத்தொகை அன்புடன் ஏற்றுக்கொள்ளப் பெறும். அத்தொகைக்குரிய நூல்கள் திருமுறை வெளியீடுகளின் முடிவில் அவர்க்கு வழங்கப்பெறும்.

முருகன் அடியார் யாவரும் இப் பெரு முயற்சியில் எமக்கு உதவிசெய்யுமாறு திருத்தணிகையெம் பெருமான் திருவருள் புரிவாராக!

இங்ஙனம்,

I. பதிப்பாசிரியரும் வெளியீட்டாளரும்:

வ. சு. செங்கல்வராய பிள்ளை,

வ. ச. மயிலேறும்பெருமாள் பிள்ளை.

சென்னை,
1—3—51.

II. அச்சிடுவோர் :- இளவழகனார்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

பேசுகிறார் என்றால் 'டெலிவிஷன்' வாயிலாக நாம் இங்கிருந்தபடியே அதனைக் கேட்க முடிகிறது. இதற்கெல்லாம் காரணம் கல்வி அல்லவா!

அறிவியல் முறையில் மழை பெய்ய வைப்பதற்கு அமெரிக்க அரசியலார் இசைவு தரவில்லை காரணம், பெய்யும் மழையை நிறுத்துவதற்கு இன்னும் அங்கு வழி காணவில்லை. இச் செய்திகளைச் செய்தித்தாள்கள் வாயிலாக நாம் உணருகிறோம்.

செய்தித் தாள்கள் எவ்வளவோ தொண்டுகள் புரிகின்றன. இரண்டு திங்களுக்கு முன்னர் இக் குருகுலத்தில் படிப்பகம் திறந்துவைத்தேன். நல்ல நினைவுடன் நீடுவாழ்த்தியே திறந்துவைத்தேன். அது சிறந்த நிலைமையில் பொதுமக்களுக்கு உதவியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

மாணவர் கல்வியில் ஆசிரியர்கள் தக்கபடி கருத்தூன்றி வருகிறார்களா என்று பெற்றோர் கவனிப்பதோடு, மாணவர்கள் இளமையில் எத்துறையில் செல்ல ஆர்வம் காட்டுகிறார்களோ அத்துறையில் அவர்கட்கு வசதி செய்து கொடுத்து முன்னேறச் செய்யவேண்டும்.

சிறு சிறு உவமைகள் காட்டிப் பிள்ளைகளுக்குப் பெற்றோரேகூடக் கல்வி ஊட்டலாம். பள்ளியில் ஆசிரியர் கற்பித்த பாடங்களைப் பெற்றோர் மேன்மேலும் வீட்டில் தெளிவுபடுத்தலாம்.

ஒருமுறை ஒரு பள்ளிக்கு நான் தணிக்கை செய்யப் போயிருந்தேன். அங்கு 'ரேடியோ'வைப் பற்றிப் பேச்சு நிகழ்ந்தது. தொலை நாடுகளில் பேசும் ஒலிகளை நாம் இங்கிருந்தபடியே கேட்ப தெப்படி என்பதைச் சிறு குழந்தைகளுக்கு விளக்கவேண்டியிருந்தது. நான் ஒரு சிறு சான்று காட்டினேன்.

ஒரு நாய் படுத்திருக்கிறது. அதன் வால் பக்கம் ஒருவன் அழுத்தினால், அதன் வாயிலிருந்து ஒலி கிளம்புகிறது. அது போலத் தொலை நாடுகளில் செய்யும் ஒலி இங்குள்ள பொறியின் வாயிலாக நமக்குக் கேட்கிறது என்றேன்.

அங்கிருந்த ஒரு மாணவன் 'நாய் அவ்வளவு நீளமாக இருக்கமுடியுமா' என்ற ஐயம் எழுப்பினான். பிறகு மற்றொரு சான்று காட்டினேன். 'ஒரு ஊமையும் நொண்டியும் மதுராந்தகத்திலிருந்து இங்கு ஒரு செய்தியனுப்ப விரும்புகிறார்கள். ஊமை பேச முடியாது; நொண்டி நடக்க இயலாது. எனவே, ஊமை மேல் நொண்டி ஏறிக்கொண்டு குறித்த இடம் வந்து சேர்ந்து, செய்தியைச் சொல்கிறான். அதுபோல, காற்றலைகளாகிய ஊமையின் உதவிகொண்டு ஒலியாகிய நொண்டி அங்கிருந்து இங்கு வந்து ஒலி பரப்பக்கூடும்' என்று கூறினேன்.

இவ்வாறு குழந்தையுள்ளத்தில் பெரிய கருத்துக்கள் பற்றும்படி செய்யவேண்டும். பெற்றோர்க்குப் பிள்ளைகளைப் பற்றியும் பாடசாலையைப் பற்றியும் எவ்வளவோ பொறுப்புகள் உண்டு. பொறுப்புணர்ந்து அவரவரும் தம் கடமைகளை இயன்ற வரையிற் செய்துவந்தால், அறியாமை வறுமை தீமை முதலிய தீய படர்ச்சிகளை வெல்லும் வழிகள் நாட்டில் உண்டாகும்.

குருகுலம் இவ்வகையில் மக்களுக்குப் பெரும்பணி செய்யக் காத்திருக்கிறது. இக் குருகுலம் மேற்கொள்ளும் அரிய பணிகள் சிறந்து முன்னேறும்படி எல்லாம் வல்ல ஆண்டவன் அருள் புரிக என்று மனமார வாழ்த்துகின்றேன்.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

மேலும் பெருமை மிக்கதாய் உயர்ந்து வருகின்றது.

ஆண்டவன் வீற்றிருப்பது, அடியார் பெருமை நிறைந்திருப்பது, வெண்ணிறத் திருநீற்றொளியின் மெய்ம்மை ஒளி தழைத்துத் தூய்மை மிகுந்திருப்பது, சோழ நாட்டுச் செங்கோல் மன்னனாகிய அநபாயனது உள்ளம்; அத் தன்மைகளே பெற்றது, திருக்கயிலை மலையும்; ஆகவே, அநபாயனது உள்ளம்போல் சிறந்திருப்பது, திருக்கயிலைமலை என்று விரும்பிக் கூறலாம்.

10

இத்தகைய தெய்வச் சிறப்பமைந்த திருமலையின் தாழ்வரையில் எல்லாம் வல்ல முழுமுதல் இறைவனொருவனையே உள்கி உணரும் மெய்யுணர்வுச் செழிப்புடன் விளங்குபவர் உபமன்னிய முனிவர். துவராபுரியின் தோன்றலாகிய கண்ணபிரானுக்கு இம் முனிவர்பிரான் திருவடித்தீக்கை செய்து அருள் வழங்கினார்; இறைவன் திருத்தொண்டு ஒன்றுக்கே முதலும் முடிவும் இல்லாதபடி நிலையாகத் தொண்டு பூண்டிருப்பவர்; பசிக்கு இறைவனால் பாற்கடல் வழங்கி வளர்க்கப் பெற்றவர்; அதாவது ஞானப்பால் உண்டு வளர்க்கப் பெற்ற ஞானத்திரு உடையவர். முனிவர் அடியார் முதலிய தூயோர், அருளுணர்வு பெறும் விருப்புடன், பல்லாயிரக் கணக்கில் தம்மைச் சூழ்ந்து விளங்க, அத் திருமலைப் பாங்கரில் இவர் ஒருமை நிலையில் வீற்றிருப்பர்.

நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை. 1

பகையா? உறவா?

[அ. கி. வீரராகவன்]

பெரியவரை வணங்கி அவர் கூறிய மொழியின்படி நடக்கத் துணிந்துவிட்டதாகக் கூறினான் இராஜராஜன். விமலாதித்தன் இறந்துவிட்டான் என்று அம்முனிவர் வாயிலாக அறிந்த சக்திவர்மன் மிகவும் வருத்தமுற்றான். ஒளியற்று விளங்கினான். அவனுக்குத் தேறுதல் மொழி பல பகர்ந்து, இராஜராஜன் தன் படைகளை அப்படியே வேங்கை நாட்டிற்குத் திருப்பினான்.

தாடியணிந்து சைவ முனிவராகச் சென்றது வேறு யாருமல்லர். ஒற்றர் தலைவன் வீரனே. அக்கால ஒற்றர் தலைவர்கள், அரசனைக் கடமையுணர்ந்து செயலாற்ற எவ்வகையிலாவது தூண்டுவர்.

தப்பி ஓடிச் சென்ற விமலாதித்தன் முன்போல் ஒவ்வோர் ஊராகச்சென்று மக்களைத் தட்டியெழுப்பி ஆள் சேர்ப்பதற்கும் இராஜராஜன் வேங்கி நாட்டின் எல்லைப்புறம் வருவதற்கும் சரியாக இருந்தது.

ஆட்சி செவ்வையாக நடவாமையின் அந்நாட்டுக் குடிகள், வருத்தமுற்றும் வாட்டமுற்றும் வறுமையுற்றும் இருந்தனர். காந்தம் இரும்பை இழுப்பது போன்று விமலாதித்தன் அன்புடன் அமைத்த பாசறையில் குடிமக்கள் அனைவரும் சேர்ந்தனர்.

ஆதித்தவர்மன் அழிக! சத்திவர்மன் வாழ்க! கொடுங்கோல் ஆட்சி ஒழிக! என்ற ஒலி பரப்பிக்கொண்டு திடீரென்று ஆதித்தவர்மன் அரண்மனையைச் சூழ்ந்துகொண்டனர் பல்லாயிர மக்கள். அவர்களை ஒழுங்காக நடத்திவந்தவன் விமலாதித்தன். அவ்வரண்மனையிலுள்ள வீரர் பலரும், வந்த கூட்டத்தோடு சேர்ந்துகொள்ள, ஆதித்தவர்மனை விமலாதித்தன் எளிதில் சிறைபிடித்தான்.

எல்லைப்புறத்தில் காத்திருந்த ஒன்றிரண்டு காவற்படைகளை வென்றுவிட்டு உட்சென்ற இராஜராஜன், எதிரே பல்லாயிரக் கணக்கான மக்கள் அடங்கிய கூட்டம் ஒன்று வருவதைக் கண்டான். முதலில் அவர்களை எதிரியின் ஆட்கள் என நினைத்தான்.

அவர்கள், ஆதித்தவர்மன் ஒழிந்தான்! சத்திவர்மன் வாழ்க! வேங்கை நாடு வாழ்க! என்று முழக்கமிட்டு வந்தனர். அதனைக் கண்ட சோழன் திகைப்பும் வியப்பும் அடைந்தான். பின்னும் அவனுக்கு அதிக வியப்பைத் தந்தது, விமலாதித்தன், எதிரே வரும் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி வந்ததாகும். அண்ணனும் தம்பியும் ஒருவரையொருவர் விரைவாக நெருங்கினர். இன்பக் கண்ணீர் பெருகியது; தழுவிக் கொண்டனர்.

இராஜராஜனை வரவேற்ற முனிவர் அங்கும் தோன்றினார். சோழன் அவரை ஐயத்துடன் நோக்கினான். வீரன் தன் பொய் மீசை, தாடியெல்லாம் களைந்து நின்றான்.

பிறகு, விமலாதித்தனுக்கும், குந்தவிக்கும் உள்ள காதல் தொடர்பையும், அவன் சிறையிலிருந்து குங்குமத்தை வாயில் போட்டுக்கொண்டு, இரத்தம் வெளிவந்ததுபோல் நடித்துத் தப்பித்துக்கொண்டதையும் வீரன் நன்கு விளக்கினான்.

குந்தவிக்கும், விமலாதித்தனுக்கும் திருமணம் மிகச் சிறப்பாக நடந்தது. அமரபுஜங்கன், சேரன் முதலானவரும் தம் பகை மறந்து திருமணத்துக்கு வந்தனர். விமலாதித்தனும், குந்தவியும் தம்மைக் காதலர்களாக்கிய, தங்களுக்கு மணம் நடப்பதற்குக் காரணமாயிருந்த சாந்தினியை வணங்கினர். விமலாதித்தன் பகைவனா? உறவினனா?

— முற்றும். —

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.



வாலாஜாபாத் இந்துமத பாடசாலைக்குச் சென்னை மாகாண முதல் அமைச்சர் திரு பி. எஸ். குமாரசாமிராஜா அவர்கள் வருகை.

MADRAS

"முல்லைக் கொடி"

குருகுலத்தின் கிழமை இதழ்.

நல்ல தமிழில், புரியும் வகையில்,
உரிய விலையில்,
பலதுறைக் கருத்தில்,
சீர்திருத்த முறையில்,
சுவைப் பண்பில், பணி உருவில்
வெள்ளிக் கிழமைதோறும்
வெளிவரும்
ஒரு பெருந்தன்மையான
உணர்ச்சி வெளியீடு!

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4
வெளிநாட்டுக்கு ரூ. 5

குறிப்பு :—

குருகுலத்தார்க்குக் கட்டணம் இல்லை; தமிழாசிரியர்க்கும், திருவள்ளுவர் கழகங்களுக்கும் ஆண்டுக் கையொப்பம் ரூ 3 மட்டும்.

இதழ் விற்பனையாளர்

எல்லா ஊர்களிலும் தேவை;
ஆறில் ஒன்று கழிவு தரப்பெறும்.
இசைந்த முன்பணத்துடன்
தேவைக்கு எழுதுக!

விளம்பரத் திட்டம்

உள் பக்கம் :

ஒரு பத்தியில் ஓர் அங்குலம் ஒரு தடவைக்கு ரூ. 1½. நீண்ட கால ஒப்பந்தங்களுக்கு ரூ. 1.

கு-பு.—நான்கு அங்குலத்துக்குக் குறையாத விளம்பரமும், ஓர் ஆண்டுக்குக் குறையாத ஒப்பந்தமும் முதன்மையாகக் கவனிக்கப்பெறும்.

மேல் பக்கம் :

முழுப் பக்கம்	ஒரு தடவைக்கு		ரூ. 30
அரைப் பக்கம்	,,	,,	ரூ. 16
ஒரு பத்தி	,,	,,	ரூ. 12

கு-பு.—தொடர்ந்த விளம்பரங்களுக்கு, கட்டண எளிமை கருதப்பெறும்.

குருகுலம், மாம்பாக்கம்;

(வடதிருச்சிற்றம்பலப் பெருவெளி)

மதுராந்தகம் (அஞ்.)

இது,
திருக்குறள் மறைக்குச்
செய்கை நிலையம்.

நாட்டு மக்கள், 'மொழி' 'கலை' 'தொழில்' 'அருள்' 'பணி' என்னும் ஐவகை வாழ்வியல் திறமைகளிற் சிறந்து திகழ்வதற்கு முயல்வது.

பள்ளி, கல்லூரி, கலையரங்கு, அச்சகம், நூற்பதிப்பு, இதழ்ப் பதிப்பு, படிப்பகம், தொழிலகம், அருள் நிலையம், உணவு விடுதி முதலிய பல்வகை உறுப்புகளுடன் பணி புரிவது.

வாழி, மன்பதை!

குருகுலத்தில் உணவு விடுதி

- பிள்ளைகள், பண்பிலும் திறமையிலும் இளம்பருவத்திலிருந்தே பழக்கம் பெற, குருகுல வாழ்க்கைதான் சிறந்தது!
- சுவைபொருந்திய நல்வாழ்க்கையைச் சிறு பருவத்திலேயே உருவாக்கிக்கொள்ள, எப்போதும் குருகுலச் சூழலே ஏற்றது.
- மதுராந்தகம் உயர்நிலைப்பள்ளி முதலிய அண்மையிடங்களிற் சென்று கல்வி பயில்வோர், குருகுல விடுதியில் இருக்க விரும்பினால், அவர்க்கும் இடம் அளிக்கப்பெறும்.
- உணவுத் தட்டும் விலையுயர்வும் உள்ள இக் காலத்தில் ஆண்டுக்கு ரூ. 200-க்கு மேற்படாத குறைந்த செலவிலும், விடுதியிற் கலந்து கொள்ள வாய்ப்புண்டு.
- தூய்மையிலும், பணியிலும், ஒருமையிலும் ஆர்வமுடையோர்க்குக் குருகுல இல்லத்தின் வாயில் என்றுந் திறந்திருக்கின்றது!

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)